DEPOSITION OF WITNESS

**(Chapter of XXIII, Criminal Procedure Code)**

IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, CHENNAI.
**Spl.SC.No.1/2024**

PROSECUTION WITNESS No. 26

| | |
|---|---|
| Name | : Dr.வேதநாயகம் |
| Father's Name | : க.திருவேங்கடம் |
| Age | : 62 |
| Address | : |

Solemnly affirmed in accordance with provision of Act X of 1873 on the 14th day of October, 2025.

எதிரிகள் ஆஜர்.

**முதல் விசாரணை :-**

நான் கடந்த 31.05.2023 அன்று ஓமந்தூரார் அரசு மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் பேராசிரியராக பணிபுரிந்து ஓய்வு பெற்றேன். கடந்த 17.01.2012 அன்று சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்தபோது கல்லூரி முதல்வரால் நியமிக்கப்பட்ட பேராசிரியர் சாந்தகுமார் அவர்களின் தலைமையிலான குழுவில் ஒரு உறுப்பினராக நியமிக்கப்பட்டு அன்று மாலை 6 மணியளவில் நித்யா என்ற நித்யராஜ், வயது 22 என்ற ஆண்

பிரேதத்தை காவலர் திரு.சக்திவேல் 35615 என்பவர் அடையாளம் காட்ட பிரேத பரிசோதனையை மாலை 6 மணியளவில் பிரேத பரிசோதனையை தொடங்கினேன். அவரது உடலின் அனைத்து பாகங்களிலும் பிரேத விறைப்புத்தன்மை காணப்பட்டது. கை விரல்கள் நீல நிறத்திலும், அவரது உடலின் பின்புறத்தில் வெளிறிய சிவப்பு நிறத்துடனும் காணப்பட்டது, கண்கள் சிவந்திருந்தன, வலது கண்ணில் 0.8 x 0.3 cm அளவில் சிவப்பு நிறத்தில் ரத்த கசிவு காணப்பட்டது. அவரது மூக்கிலிருந்து திரவ நிலையில் ரத்தம் கசிந்து கொண்டிருந்தது.

**வெளிப்புற காயங்கள்:**

1. பழுப்பு நிறத்திலான ஒழுங்கற்ற சிராய்ப்பு காயங்கள் கீழ்க்கண்ட இடங்களில் காணப்பட்டன.

a) வலது கையின் கீழ் உள்பகுதியில் 1.7x0.5cm

b) வலது கையின் கீழ் பின்பகுதியில் 1.6x 0.4 cm

c) வலது முழுங்கையின் பின்பகுதியில் 14.4x 3–1.2cm

d) வலது முழங்கையில் மேல் உள்பகுதியில் 1.7x0.4cm

e)வலது கையின் பின்புறத்தில் 1x0.5cm

f) வலது முழுங்கை முட்டியில் 1.6x1cm

g) வலது கால் முட்டியின் முன்பகுதியில் 0.5x0.3cm மற்றும் 0.6x 0.5cm

h) வலது காலின் உள்பகுதியில் 9x3–1.4cm

I) வலது கணுக்கால் முட்டியின் வெளிப்புறத்தில் 0.7x 0.2cm மற்றும் 0.2x 0.2cm

J) வலது கையின் வெளிப்புறத்தில் 2.1x 0.2cm

k)இடது கையின் பின்புறத்தில் 27.6x 3-1 cm அளவில் குறுக்குவாட்டில் கையைச் சுற்றி ஒரு காயம்

l) இடது முன்கையின் முன்பகுதியில் 1.8x 0.2cm

m) இடது கால் முட்டியின் முன்புறத்தில் 0.5x 0.1 cm

n) இடது கால் முட்டியின் வெளிப்புறத்தில் 0.5x 0.2cm
o) இடது காலின் வெளிப்புறத்தில் 8x 3-0.8cm
p) இடது காலின் வெளிப்பகுதியில் 4.3 x 1-0.2cm
q) இடது காலின் மைய வெளிப்புறத்தில் 3.4x 0.2-0.1cm
r) இடது பக்க வயிற்றின் மேற்பகுதியில் 1.4x 0.5-0.3 cm இடது மார்பக காம்பில் 13.5 x 9-3cm ஒரு காயம்.
s) இடது பக்க மார்பக கூட்டின் வெளிப்பகுதியில் 5x 0.5-0.2cm அளவில் ஒரு காயம்

காயம் எண்.2 இடது காலின் வெளிப்பகுதியில் 11.5x 8-3cm அளவில் பழுப்பு நிறத்தில் குறுக்கு வாட்டிலான சிராய்ப்பு காயம்

காயம் எண்.3. இடது முழங்கையின் மைய பின்பகுதியில் 4x 3cmx தோல் ஆழத்தில் ஒரு கன்றிய காயம்

காயம் எண்.4. இடது கையின் பின்பகுதியில் 2x 1.5cm x தோல் ஆழத்தில் ஒரு கன்றிய காயம்

காயம் எண்.5. இடது கணுக்கால் முட்டியின் முன்பகுதியில் 4x 1cm x தோல் ஆழத்தில் ஒரு கன்றிய காயம்

காயம் எண்.6 இடது காலின் மேல் முன்பகுதியில் 3x 2cm x தோல் ஆழத்தில் ஒரு கன்றிய காயம்

காயம் எண்.7, வலது மணிக்கட்டின் பின்பகுதியில் 7x 2.5–0.5cm x தோல் ஆழத்தில் ஒரு கன்றிய காயம்

காயம் எண்.8, வலது முழங்கையின் கீழ் முன்பகுதியில் 3x 1cm x தோல் ஆழத்தில் ஒரு கன்றிய காயம்

காயம் எண்.9, அவரது தலையை கூறாய்வு செய்ததில் தலையின் வலது பக்கத்தில் 8x 6cm x தோல் ஆழத்திற்கு ஒரு கன்றிய காயம் காணப்பட்டது,

மேலும் கூறாய்வு செய்ததில் மண்டை ஓட்டிலிருந்து நல்ல நிலையில் காணப்பட்டது. மூளையின் மேற்பகுதியில் ரத்தம் உறைந்து காணப்பட்டது. அவரது இரைப்பை காலியாக இருந்தது. மற்ற உள்ளுறுப்புகள் சாதாரண நிலையிலும், கன்றியும் காணப்பட்டது. அவருடைய நாவடி எலும்பு, இடுப்பெலும்பு, தண்டுவடம் நல்ல நிலையில் காணப்பட்டது. கூறாய்வு அறிக்கையில் காணப்பட்ட அனைத்து காயங்களும் இறப்பதற்கு முன் ஏற்பட்டவைகளாகும். அவை 3 முதல் 4 நாட்களுக்கு முன் இறப்பதற்கு முன் ஏற்பட்டிருக்கக்கூடும். காய எண்கள்.3 முதல் 8 வரை விபத்தினால் ஏற்பட வாய்ப்புண்டு. மேற்சொன்ன நபர் அவரது தலையில் ஏற்பட்ட காயத்தின் விளைவாக இறந்திருக்கக்கூடும் என்று சான்றளித்தோம். மேற்கண்ட நபரின் இறப்பு பிரேத பரிசோதனைக்கு 30 முதல் 32 மணி நேரத்திற்கு முன்பாக இருக்கும் என்று சான்றளித்துள்ளோம். நாங்கள் வழங்கிய பிரேத பரிசோதனை அறிக்கை என்னிடம் காட்டப்படுவதுதான், அது **அ.சா.ஆ. 23**. இது சம்பந்தமாக என்னை போலீசார் விசாரித்தார்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>**

பிரேத பரிசோதனைக்கு முன்பு இறந்தவருக்கு வழங்கப்பட்ட சிகிச்சை குறித்த மருத்துவ பதிவேடுகளை நான் பார்வையிடவில்லை. நான் எனது பிரேத பரிசோதனை அறிக்கையின் Column D யில் காயம் எண்.2 மற்றும் 9 ஆகியவை Accidental ஆக ஏற்பட வாய்ப்புள்ளது என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். காயம் எண். 1ல் கூறப்பட்டுள்ள சிராய்ப்பு காயங்கள் அனைத்தும் கீழே விழுவதாலோ பல்வேறு விதமான விபத்துகளாலோ ஏற்பட்டிருக்க வாய்ப்புண்டு

என்றால் சரிதான். காயம் எண். 9 Sub–dural Haemorrhage and Sub Araconoid Haemorrhage என்று குறிப்பிட்டுள்ளேன். விபத்தில் கூட மேற்சொன்ன ரத்தச்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மேற்சொன்ன ரத்தக்கசிவு மது போதையில் இருப்பவர்களுக்கு அதிகமாக வாய்ப்புள்ளது என்றால் அவ்வாறு குறிப்பிட்டு கூற இயலாது. Modi's Medical Jurisprudence, 23rd Edition, Page No.809 உட்தலைப்பு Sub Araconoid Haemorrhage என்பதில் Sub Araconoid Haemorrhage is aggravated by Alhocolic intoxication என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான், ஆனால் அது போன்ற வழக்குகளை நாங்கள் நடைமுறையில் பார்த்ததில்லை. வலது கண்ணில் ரத்தத் கசிவு கீழே விழுவதால் கூட ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். பிரேத பரிசோதனை அறிக்கையை இரண்டு பேர் கொண்ட மருத்துவக் குழு தயாரித்தோம். பிரேத பரிசோதனையில் Dissection செய்து Points கூறியவர் டாக்டர்.சாந்தகுமார் நான் அதை குறிப்பெடுத்துக் கொண்டேன். எனக்கு பிரேத பரிசோதனை குறித்து சாட்சியம் அளிக்க தகுதியில்லை என்றால் சரியல்ல.

**நீதிமன்ற கேள்வி எண்.1:–**

உங்கள் பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவரின் உடல் உள்ளுறுப்புகளிலிருந்து திசுக்கள் சேகரிக்கப்பட்டு Histo pathological Examination க்கு அனுப்பிதாக குறிப்பிட்டுள்ளீர்கள், அதன் அறிக்கை உங்களுக்கு கிடைக்கப் பெற்றதா?

**பதில்:–** இல்லை.

**நீதிமன்ற கேள்வி எண்.2:–**

உங்கள் பிரேத பரிசோதனை அறிக்கையில் இறந்தவரின் மூக்கின் இரு துவாரங்களிலிருந்து ரத்தம் கசிந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் அதற்கு காரணம் என்ன?

**பதில்:–** சில இயற்கையான மரணங்களில் கூட அவ்வாறு நிகழும். மாரடைப்பின் காரணமாக கூட அவ்வாறு ஏற்பட வாய்ப்புள்ளது.

**நீதிமன்ற கேள்வி எண்.3:–**

இறந்தவரின் இருதயம் சாதாரணமாக இருந்ததாக குறிப்பிட்டுள்ளீர்கள் அவருக்கு மாரடைப்பு நிகழ்ந்ததற்கான அறிகுறிகள் காணப்பட்டதா?

**பதில்:–** இல்லை

**<u>எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை</u>**

மலச்சிக்கல் ஏற்பட்டு மலம் கழிக்க தீவிரமாக முயலும்போது மயக்கம் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

| |
|---|
| Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct. |
| **Principal Judge** |